REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)



CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 21 MAY 2025 CLICK - 02 ₹. 1

## அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**

CVPA செயலாளர்





## டிஜிமீடியா 2025 கிரேட் சக்ஸஸ்!
## மாநில சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டு!!

### மூன்று தினங்களும் அறுசுவை உணவு வழங்கிய தினா கலர்லேப் தினகரனுக்கு பாராட்டுக்கள் குவிகிறது!!!

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

மாநில சங்கம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட டிஜிமீடியா 2025 ஐந்தாவது எடிஷன் மிக சிறப்பாக நடைபெற்று முடிந்தது. CVPA ஆதரவுடன் நடைபெற்ற இந்த டிஜிமீடியா 2025 எல்லோராலும் பாராட்டப்பட்டது. மே 9,10,11 ஆகிய மூன்று தினங்களுக்கும் மாநிலசங்கம் சார்பாக பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. டிஜிமீடியா 2025 எக்ஸ்போவை, மாநிலத் தலைவர் சிவக்குமார், மாநில பொதுச் செயலாளர் ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையில், திரைப்பட நடிகர்கள் பரத், அஜய் கார்த்திக், திரைப்பட நடிகைகள் பவானி, சங்கீதா மற்றும் திரைப்பட இயக்குனர் பேரரசு ஆகியோர் குத்து விளக்கேற்றி டிஜிமீடியா 2025 எக்ஸ்போவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

அனைத்து மாவட்டத்தில் இருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட மூத்த புகைப்பட கலைஞர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு சிறப்பு விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களுக்கான நினைவு பரிசு மற்றும் சான்றிதழ் போன்றவற்றை விழாவின் சிறப்பு விருந்தினர்களான திரைப்பட ஒளிப்பதிவாளர் மதுஅம்பர்ட், கலைமாமணி யோகா, கலைமாமணி ஸ்டில்ஸ் ரவி, சினிமா டோகிராபர் தேனி ஈஸ்வரன், வைஷாலி சுப்பிரமணியம் மற்றும் இயக்குனர் செழியன் ஆகியோர் வழங்கினார்கள். குறிப்பாக சென்னை மாவட்டத்தில் இருந்து வாழ்நாள் சாதனையாளர்களாக நான்கு மூத்த புகைப்பட கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் முறையே, திரு.சுந்தர்,சுந்தர் ஸ்டுடியோ, விருகம்பாக்கம், திரு.கோவிந்தராஜுலு, அருள் வீடியோ, வண்ணாரப்பேட்டை, திரு.மலர்மன்னன், சுதேஷ் டிஜிட்டல் போட்டோகிராபி, புளியந்தோப்பு, திரு.ஜெயக்குமார், ஜெயக்குமார் ஸ்டுடியோ, தாம்பரம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நினைவு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இதைப்போல் இளம் வயதில் சாதனை புரிந்த நமது கலைஞர்களின் இளம் சிறார்களை பாராட்டி, அவர்களுக்கு மாநில சங்கம் சார்பாக சான்றிதழ் வழங்கப்பட்டது. சென்னை மாவட்டத்தில் இருந்து மூன்று இளம் சாதனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மூவருமே, பெண் விளையாட்டு வீராங்கனைகள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் பெயர்கள் முறையே, பவித்ரா D/o. ரஜினிபத்மநாபன் (ஹாக்கி) ஸ்டேட் லெவல் வின்னர், லத்திகா D/o.ரமேஷ் (டேபிள் டென்னிஸ்) இன்டர்நேஷனல் லெவல் வின்னர், அபிநய சரஸ்வதி D/o. பாலசுப்பிரமணியம் (பாக்சிங்), இன்டர்நேஷனல் லெவல் வின்னர், விருதும் பாராட்டு சான்றிதழும் பெற்ற இவர்கள் அனைவரையும் நமது சங்கம் சார்பாக வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம். எம்ஜிஆர் யுனிவர்சிட்டி மற்றும் ஏசிஎஸ் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு மாநில சங்கம் சார்பாக பாராட்டு விழாவில், இதில் பட்டம் பெற்ற மாணவ மாணவியர்களும், தங்கள் பெற்றோர்களுடன் திரளாக வந்து கலந்து கொண்டார்கள்.

மூன்று நாட்கள் நடைபெற்ற டிஜி மீடியா 2025 எக்ஸ்போவில் ஒளிப்படத் துறையின் சிறந்த பயிற்றுனர்களாக விளங்கும்,எழுத்தாளர் மற்றும் இயக்குனர் திரு.ராஜ்குமார், அடோப் மென்பொருளில் சிறந்து விளங்கும் நாக்பூர் திரு.கணேஷ், திரைப்பட நடிகர் திரு.சண்முகவேல், திரைப்பட இயக்குனர். திரு.ஈசான், சினிமாட்டோகிராபர் தேனி திரு.ஈஸ்வரன், திரு.பிரசன்ன வெங்கடேஷ், AI தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் வேலைக்காரன் திரு.செந்தில், இயக்குனர் சினிமாடோகிராபர் திரு.விஜய் மில்டன், விஎஃப் எக்ஸ் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் திருமண ஸ்பெசலிஸ்ட் திரு.அரவிந்த் மற்றும் திரு. சிவசங்கர், கேனான் ஸ்பெசலிஸ்ட் பூபாலன் ஆகியோர் சிறப்பு பயிற்சி பட்டறை வகுப்பு நடத்தினார்கள். இந்த பயிற்சி வகுப்பில் பல்வேறு மாவட்டத்தை சார்ந்த புகைப்பட கலைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.டிஜிமீடியா2025 எக்ஸ்போவில் எப்போதும் இல்லாதது. யாராலும் செய்ய முடியாது. இதை அறிவிப்பதற்கு துணிவும், தைரியமும் இருக்க வேண்டும். அவர்களால் மட்டுமே இதை செய்ய முடியும். இந்த மாபெரும் சாதனைக்கு சொந்தக்காரர் நமது CVPA சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் தீனா கலர் லேப் உயர்திரு தினகரன் ஆவார். மூன்று நாட்கள் எக்ஸ்போவிற்கு வந்த 8,000 க்கும் மேற்பட்ட நமது ஒளிப்பட கலைஞர்களுக்கு தினாகலர்லேப் திரு.தினகரன் அவர்கள் வழங்கிய மதிய நேர கட்டணம்மில்லா உணவு உபசரிப்பு டிஜி மீடியா எக்ஸ்போவின் மிகப்பெரிய ஹைலைட்டாக அமைந்தது. உணவு அருந்திய அனைவருமே திரு.தினகரன் அவர்களை பாராட்டிக் கொண்டே இருந்தார்கள். ஒளிப்பட கலைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில்

தீனா கலர் லேப் திரு. தினகரன் அவர்களின் சிறப்பான ஏற்பாட்டை நமது CVPA சார்பாக பாராட்டி அவரது சேவை தொடர வாழ்த்துகிறோம். மதிய உணவு வழங்கிய தினா கலர் லேப் தினகரன் அவர்களுக்கு உடனிருந்து உதவி செய்து, எவ்வித சர்ச்சைகளுக்கும் இடம் தராமல், இல்லை என்ற பேச்சுக்கு இடம் தராமல், கடைசி வரை மகிழ்ச்சியுடன் உணவு பரிமாறிய CVPA நிர்வாகிகள் மற்றும் அனைத்து பகுதி செயலாளர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம். டிஜி மீடியா வெற்றி பெற மாநில சங்கத்துடன் இணைந்து செயல்பட்டு உழைத்த சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து பகுதி செயலாளர்களுக்கும்

நம்முடைய CVPA சார்பாக

**நன்றி! நன்றி!! நன்றி !!!**

இப்படிக்கு, P. **துரைபாபு** CVPA செயலாளர்

## சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

No.51/24, பங்காரு தெரு, எல்லீஸ் ரோடு, Cell : 7824034734

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

நன்றி நன்றி நன்றி



டிஜிமீடியா 2025 போட்டோ வீடியோ தொழில்நுட்ப கண்காட்சியை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து காண வந்த போட்டோ வீடியோ கலைஞர்களுக்கு மூன்று நாட்களும் மதிய உணவு ஏற்பாடு செய்துகொடுத்த நமது CVPA-ன் ஆயுட்கால உறுப்பினரும், மனிதநேயருமான

**தினா கலர் லேப்**

**திரு. தினகரன்** அவர்களுக்கு

CVPA சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

CVPA நிர்வாக குழு, செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள்

# டிஜி மீடியா 2025 எக்ஸ்போ



Digi மீடியாவை திறந்துவைத்து திரைப்பட இயக்குநர் பேரரசு உரையாற்றிய தருணம்



திரைப்பட இயக்குநர் பேரரசு அவர்களுக்கு கலைமாமணி ஸ்டில்ஸ் ரவி மற்றும் கலைமாமணி யோகா ஆகியோர்கள் நினைவு பரிசு வழங்கிய தருணம்



CVPA தலைவர் புருஷோத்தமன் அவர்களுக்கு மாநில பொதுச்செயலாளர் ஸ்ரீதர் நினைவு பரிசு வழங்கிய தருணம்



மாநில தலைவர் சிவகுமார் அவர்கள் முன்னாள் மாநில தலைவர் ஸ்ரீதர் அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கிய தருணம்



மாநில சங்கம் சார்பாக வழங்கப்பட்ட மூத்த புகைப்பட கலைஞர்களுக்கான சாதனையாளர் விருதை CVPA நிர்வாகிகளுடன் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்ட தருணம்







Digi மீடியாவை சிறப்பாக நடத்திய மாநில சங்க நிர்வாகிகளுக்கு சென்னை மாவட்டத்தின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்கள்

# டிஜி மீடியா 2025 எக்ஸ்போவில் மூத்த கலைஞர்கள் மற்றும் இளம் சிறார்களுக்கு மாநில சங்கத்தின் சார்பாக சாதனையாளர் விருது











சென்னை மாவட்டத்தில் இருந்து வாழ்நாள் சாதனையாளர்களாக நான்கு மூத்த புகைப்பட கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு.சுந்தர்,சுந்தர் ஸ்டுடியோ, விருகம்பாக்கம். திரு.கோவிந்தராஜுலு, அருள் வீடியோ,வண்ணாரப்பேட்டை. திரு.மலர்மன்னன், சுதேஷ் டிஜிட்டல் போட்டோகிராபி, புளியந்தோப்பு, திரு.ஜெயக்குமார், ஜெயக்குமார் ஸ்டுடியோ, தாம்பரம் இவர்களுக்கு திரைப்பட ஒளிப்பதிவாளர் மது அம்பர்ட் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.





சென்னை மாவட்டத்தில் இருந்து மூன்று இளம் சாதனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பவித்ரா D/o. ரஜினிபத்மநாபன், ஹாக்கி, ஸ்டேட் லெவல் வின்னர் லத்திகா, D/o. ரமேஷ், டேபிள் டென்னிஸ் இன்டர்நேஷனல் லெவல் வின்னர் அபிநய சரஸ்வதி, D/o. பாலசுப்பிரமணியம், பாக்சிங், இன்டர்நேஷனல் லெவல் வின்னர் இவர்களுக்கு திரைப்பட இயக்குநர்கள் விருதும் பாராட்டு சான்றிதழும் வழங்கினார்கள்.

# டிஜி மீடியா 2025 எக்ஸ்போவில் கலந்துகொண்ட எம்.ஜி.ஆர். யூனிவர்சிட்டி குழுமத்தார்கள்




















நமது உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வியை இலவசமாக கொடுக்கும் எம்ஜிஆர் யூனிவர்சிட்டி கல்வி நிறுவனத்திற்கும் திரு. அருண் குமார் அவர்களுக்கும் CVPA சார்பாக நன்றிகள்!

# டிஜி மீடியா 2025 எக்ஸ்போவில் CVPA



டிஜி மீடியாவில் வருகை புரிந்த அனைத்து புகைப்பட சொந்தங்களுக்கும் மதிய உணவை சிறப்பாக செய்து கொடுத்த CVPA சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் தீனா கலர்லேப் உரிமையாளர் திரு. தினகரன் அவர்களுக்கு CVPA சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.













CVPA-வின் மயிலாப்பூர் பகுதி செயலாளர் திரு. ஹரிஹரன் என்கிற பழனி அவர்களின் இளைய மகன் H.சஷ்வந்த்தின் முதலாம் ஆண்டு பிறந்தநாள் வெகு விமரிசையாக கொண்டாடப் பட்டது. இந்த நிகழ்ச்சியில் CVPA சார்பாக, CVPA நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு குழந்தைக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.



CVPA– வின் முன்னாள் துணைத் தலைவரும், சங்கத்தின் மூத்த உறுப்பினரும் ஆகிய திரு. ID CARD ராஜா அவர்களின் இல்ல புதுமனை புகு விழாவில் CVPA நிர்வாக குழு, மற்றும் இந்நாள், முன்னாள் செயற்குழு உறுப்பினர்கள், நியூஸ் ஆசிரியர் ஸ்ரீதர் ஆகியோர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



தென் சென்னை எஸ்2 குரோம்பேட்டை பகுதி செயலாளர், திரு. விஜயகுமார் அவர்களின் இல்ல புதுமனை புகு விழாவில் CVPA சார்பாக, CVPA நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில அமைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



மத்திய சென்னை, அயனாவரம் பகுதி முன்னாள் பகுதி செயலாளர் திரு.மேக்ஸ்வெல் – பியூலா தம்பதியினரின் இளைய மகள் பெர்டினா மால்வியாவிற்கு நடைபெற்ற மஞ்சள் நீராட்டு நிகழ்ச்சியில் CVPA சார்பாக, CVPA நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



வட சென்னை , திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த CVPA உறுப்பினர் திரு.சந்தோஷ் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற விழாவில், CVPA சார்பாக, CVPA நிர்வாக குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.





மத்திய சென்னை உறுப்பினர், திரு. செந்தில்குமார் என்கின்ற ஆனந்த் அவர்களின் இல்லத் திருமண நிகழ்ச்சியில் CVPA சார்பாக, CVPA நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



நமது சங்கத்தின் உறுப்பினர்கள் திரு.பிரபாகரன் மற்றும் திரு.S.K.ராஜ் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவில் CVPA சார்பாக, CVPA நிர்வாக குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



மத்திய சென்னை புரசைவாக்கம் பகுதியை சேர்ந்த, திரு. S. பரத்சீனு - திருமதி. உதயா இவர்களின் மகள் சரண்யா – பிரிட்டோ திருமண நிகழ்ச்சியில் CVPA சார்பாக, CVPA நிர்வாக குழு, செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



SINCE 1997 மே 2025 விலை ரூ.30/-
லேடீஸ் ஸ்பெஷல்
பெண்கள் மாத இதழ் புறப்படு பெண்ணே! புவியசைக்க...
சாதிக்கத் துடிக்கும் சகோதரிகளுக்கான ஒரே பெண்கள் மாத இதழ்

ஒரு புகைப்படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு சமம் என்பார்கள். இந்த அரிய நூலில் கணக்கிட்டுப் பார்த்த பொழுது 200 படங்கள் இருக்கின்றது. அப்படியானால் இது வெறும் 25 அத்தியாயங்கள் கொண்டதொரு கட்டுரை நூல் மட்டுமல்ல, பேசுகின்ற புகைப்படங்கள் நம்மை இந்த நூலை கீழே வைக்க முடியாமல் வாசிக்க வைக்கின்றது.

இந்த நூலுக்கு பத்மபூஷன் திரு நல்லி குப்புசாமி செட்டியார், பேராசிரியர் உலகநாயகி பழனி, பிரபல எழுத்தாளர் திரு என் சி மோகன்தாஸ் என்று மூன்று பெருமக்கள் அணிந்துரை வழங்கியுள்ளனர். தவிர, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் வாழ்த்துரை கவிதையுரையாக.

இந்த நூல் 16 வயதினிலே, முதல் மரியாதை, கருத்தம்மா போன்ற காவியங்களை இயக்கிய ஒரு ஜாம்பவான் இயக்குனர் இமயம் பாரதிராஜா பற்றியது என்று நினைத்தால் அது தவறு. இன்றைய புகைப்படக் கலைஞர்கள் அனைவரும் அவசியம் தமது உயர்வுக்கு தேவையான விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்து விஷயங்களும் உள்ளடக்கிய ஒன்று என்றால் அது மிகையல்ல.

நூல்: இயக்குநர் இமயத்துடன் 25 வருட இனிய நினைவுகள்
ஆசிரியர்: 'கலைமாமணி' யோகா
வெளியீடு: யோகா-சாகித் பப்ளிகேஷன்
பக்கங்கள்: 256 விலை: ரூ.600/-

கலைமாமணி யோகா அவர்கள் மிகத் திறமையான ஒளிப்படக் கலைஞர் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் அதைத் தாண்டி அவரிடம் உள்ள நல்ல குணங்கள் எவ்வாறு அவரை மென்மேலும் உயர்த்தி இந்த ஒளிப்பட கலைஞர்களின் ஆதர்ச மனிதனாக ஆக்கியது என்பதை இந்த புத்தகத்தை படிக்கும் போது தெரிந்து கொள்ளலாம். ஒரு நல்ல பாட்டு கேட்டால் இது இசைஞானி இளையராஜா இசை என்று யூகிப்பது போல ஓர் அழகிய படம் பார்த்தால் இது யோகா அவர்களின் கைவண்ணம் என்று நிச்சயம் யூகிக்கலாம் என்று பெயர் வாங்கியவர் இந்த நூல் மூலம் தான் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதையும் நிரூபித்துள்ளார்.

சக கலைஞர்களை அன்புடன் நேசிக்க வேண்டும். எந்த ஒரு விஷயத்திலும் 100% ஈடுபாடு காட்ட வேண்டும். பெரியவர் சிறியவர் என்ற பேதம் பார்க்காமல் அனைவரிடமும் பரஸ்பர மரியாதையுடன் கலந்த சிநேகமாய் இருக்க வேண்டும். எந்தவிதமான எதிர்மறை எண்ணங்கள் இல்லாமல் பாசிட்டிவாக மட்டுமே சிந்திக்க வேண்டும். எந்த ஒரு தேவையற்ற விமர்சனங்களை மற்றவர்கள் பற்றி வேறு நபர்களுடன் ரகசியமான விஷயங்கள் உட்பட மற்றவர்களிடம் பரிமாறக்கூடாது. நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட நேரத்தை மிகச் சரியாக கையாள வேண்டும். இதற்கெல்லாம் மேலாக தனது பொருளாதாரத்தை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும்.தன்னை தன் படங்கள் மூலம் எவ்வாறு வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி படங்கள் பலவற்றோடு பாடங்கள் பல சொல்லித்தரும் ஒரு உன்னத புகைப்படக் கவிஞரின் நூல் இது.

சுமாராக இருப்பவர்களைக் கூட மிகவும் நன்றாக நடிக்க வைத்தவர் இயக்குநர் பாரதிராஜா அவர்கள். சுமாராக இருப்பவர்களைக் கூட மிகவும் அழகாக தனது லென்ஸின் மூலம் படம் பிடித்து தடம் பிடித்தவர் கலைமாமணி திரு யோகா அவர்கள்.

78 வயதிலும் எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லாமல், நேர்மையான மனதோடு இருப்பதனால் இன்றும் மாதத்திற்கு குறைந்தது 20 நிகழ்ச்சிகளை படம் எடுக்கும் ஒரு மிகப்பெரிய புகைப்படக்கலைஞராக,அனைவரும் நேசிக்கும் புகைப்படக்கலைஞராக அனைவரையும் நேசிக்கும் புகைப்படக் கலைஞராக அனைவரும் மகிழ்வுடன் சந்திக்கும் புகைப்பட கலைஞராகஅவரை உயர்த்தியுள்ளது என்பதை இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது.

இயக்குநர் இமயம் மற்றும் திரு யோகா அவர்கள் இருவரின் ஆழ்ந்த நட்பு மற்றும் அன்புக்கு ஓர் அழகிய ஆவணம் இந்த நூல். ஒரு புகைப்படக் கலைஞருக்குள் இருக்கும் திறன்மிகு எழுத்தாளர் இந்த நூல் மூலம் வெளிப்படுகிறார் என்பதில் சந்தேகமில்லை. அதிர்ந்து பேசாதவர், தமது துறையில் அனைத்தும் தெரிந்தவர், ஆற்றல் மிக்கவர், அழகானவர், அனைவரையும் அழகாகக் காட்டுபவர், அரியபல பண்பு மிக்கவர் ஒருவரின் அனுபவப் பிழிவு தான் இந்த நூல்.

"என்னுடைய வாழ்க்கையே பல அத்தியாயங்கள் கொண்ட நாவல் என்று சொல்லலாம். நான் எதிர்பார்க்காமல் நடந்த பல மகிழ்ச்சியான சம்பவங்கள் ஏராளம்' அப்படியான பல அத்தியாயங்களில் மிகவும் மகோன்னதமான ஒன்று தான் இயக்குநர் பாரதிராஜா அவர்களுடனான நெருக்கம்" என்று திரு யோகா அவர்கள் இந்த நூலில் தமது 'என்னுரையில்' குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்த அற்புதமான நூலின் வெளியீட்டு விழா கலைமாமணி யோகா அவர்களின் 78வது பிறந்த நாள் (17.02.2025) அன்று சென்னை நாரத கான சபாவில் நடைபெற்றது. நூலினை இயக்குநர் எஸ் பி முத்துராமன் அவர்கள் வெளியிட அதன் முதல் பிரதியை திரைப்பட இயக்குநர் கே பாக்கியராஜ் அவர்கள் பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சிக்கு பத்மபூஷன் நல்லி செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். விழாவில் திரைத்துறையைச் சேர்ந்த பவானி சங்கர், மூத்த பத்திரிகையாளர் ராம்ஜி, சித்ரா லக்ஷ்மணன், யு எஸ் ஏ டாக்டர் ராஜன், ஹம்சத்வனி சுந்தர், என் ஆர் பழனிக்குமார்,ஆடிட்டர் கலைமாமணி ஜெ பாலசுப்ரமணியன், பேராசிரியர் உலகநாயகி பழனி, ஆகியோர் கலந்து கொண்டு தமது உரைகள் மூலம் விழாவைச் சிறப்பித்தனர்.

"இந்த புத்தகத்தை படித்துப் பார்த்து பரவசம் அடைபவர்கள் பாராட்டுக் கடிதங்கள் எழுதினால் அதுவே ஒரு நூலாக வெளிவரக்கூடும்" என்று பாராட்டியுள்ள திரு நல்லி செட்டியார் கூற்று முற்றிலும் உண்மை. இந்த அற்புதமான நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

'கலைமாமணி' யோகா
எழுதிய நூல் வெளியீட்டு விழா
இயக்குநர் இமயத்துடன் 25 வருட இனிய நினைவுகள்

கட்டுரை: பாலசாண்டில்யன் புகைப்படம்: கலைமாமணி யோகா

62 63

மே 2025

## டிஜிமீடியா எக்ஸ்போவில் 2000 பேருக்கு CVPA சார்பாக மோர் வழங்கப்பட்டது.





டிஜி மீடியா 2025 எக்ஸ்போ நடந்த மூன்று நாட்களும் கோடைவெயிலின்தாக்கம்அதிகமாகஇருந்தகாரணத்தால், எக்ஸ்போவிற்கு வருகை தந்த பார்வையாளர்களுக்கு மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை அன்று இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்களுக்கு சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் சார்பாக நீர் மோர் வழங்கப்பட்டது. CVPA தலைவர் புருஷோத்தமன் தலைமையில், நமது சங்கத்தின் பகுதி செயலாளர்கள் நீர் மோரை வந்தவர்களுக்கு வழங்கினார்கள்.

## வருந்துகிறோம்



நமது சங்கத்தின் தென் சென்னை எஸ்-1 ன் முன்னாள் துணைத் தலைவரும், முன்னாள் பொருளாளருமான விஜயகுமார் அவர்களின் தாயார் **திருமதி.க.லட்சுமிபாய்** அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி சடங்கு மற்றும் இறுதி ஊர்வலத்தில் CVPA நிர்வாகிகள். மற்றும் பகுதி செயலாளர்கள், மாநில சங்க நிர்வாகிகள், வெளி மாவட்டத்தைச் சேர்ந்த சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் சங்கங்களின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டனர்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR**, on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN**, at **Nava Jothi Achagam**, No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR**, Mobile: 8015170351